**அகரபத்தன பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஏப்ரல் 01 முதல் திசெம்பர் 31 வரையான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அகரபத்தனை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்து பதிவேட்டு மீதிக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 1,138,325 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 577,041 ஆக இருந்த போதிலும், அது ரூபா 158,625 ஆக கணக்கு வைக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதி என்பன ரூபா 418,416 வீதம் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சபைக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (iv) | 02 வேலைக்குரியதாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 1,736,619 தொகைக்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (v) | மீளாய்வாண்டின் ஊழியர் கடன் அறவிடல் ரூபா 362,200 தொகை மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (vi) | கந்துறட்ட புதிய கிராமம், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 02 வேலைகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனச் செலவினம் மற்றும் பெற வேண்டிய மூலதன நிதியுதவி ரூபா 626,908 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு மீதிகளின் பெறுமதிகளை அந்த கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டுப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்யும் போத ரூபா 157,047 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 9,981,646 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரிய உரித்துறுதி / கையளித்தல் கட்டளை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை, மீதி பட்டோலை மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பாதீடு என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மீதியை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க விநியோகிக்கப்பட்ட 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் கடந்திருந்த 31 தொழில்முயற்சிகளுக்காக புதிய அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே புதிய சபை தாபிக்கப்பட்டதன் பின்னர் அதிகாரப்பிரதேசத்தில் உள்ள சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய தொழிற்முயற்சிகளை இனங்காண்பதற்கு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைக் (நிதி மற்றும் நிர்வாக விதி) விதி<br>----------------------------------- | | | |
| (i) | விதி 141 | பீ.எஸ் 39 படிவத்தின் பிரகாரம் வைப்புப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | விதி ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) | விதி 217 | சபைக்குச் சொந்தமாகவுள்ள சகல காணியும், கட்டிடங்களும் பீ.எஸ்.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்றில் பதியப்பட்டிருக்கவில்லை. | (நிதி மற்றும் நிர்வாகம்) விதியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (iii) | விதி 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | (நிதி மற்றும் நிர்வாகம்) விதியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 மற்றும் பெறுகை கைநூல் இற்கான 22 ஆவது உபரி | பதிவு செய்துள்ள சங்கத்திற்கு ஒப்பந்தத்தை கையளிக்கும் போது உரிய திணைக்களத்தின் தலைவராலும் பிரதேச செயலாளராலும் நியமித்த இரண்டு உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவின் பரிந்துரை பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான பரிந்துரையின்றி அங்கீகரிக்கப்பட்ட 02 சங்கங்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | உரிய ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | 2018 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலகட்டத்தில் அமைய / நாட்கூலி அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 08 ஊழியர்களுக்காக அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | உரிய சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,965,288 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**(அ) மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

2018 ஏப்ரல் 01 ஆந் திகதி தாபிக்கப்பட்ட சபையின் 2018 திசெம்பர் ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | | | 2018 | |
|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,036,075 | 1,203,694 | 1,210,963 | 750,350 |
| (ii) | வாடகை | 90,000 | 25,545 | 22,840 | 14,782 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,280,000 | 1,106,560 | 1,106,560 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,531,600 | 992,044 | 782,588 | 719,088 |
| | | 7,937,675 | 3,327,843 | 3,122,951 | 1,484,220 |

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

**2.2.2 வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 803,262 தொகையான ஆதனவரி நிலுவையில் ஆண்டின் போதான அறவிடல் ரூபா 123,364 ஆகும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 158,625 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 80,000 தொகையான முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப விதிகளை விதிப்பதற்கோ அல்லது 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி அங்கீகரித்த உப விதி பின்பற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | காலப்பகுதிக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று சமர்ப்பித்தல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

(இ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நோனாவத்த நகரத்தில் பொது மலசலகூடம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைக்காக 2018 திசெம்பர் மாதம் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 138,517 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 மே மாதம் வரையிலும் வேலை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் முற்பணப் பணமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை தாமதமின்றி அமுல்படுத்தல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) அகரபத்தன பொது மலசலகூடத்தின் கழிவுகளை கொண்டு செல்கின்ற குழாய், வெட்டப்பட்ட குழிக்குள் அனுப்பப்படாமல் சுற்றாடலில் திறந்த நிலையில் காணப்பட்டது. | முறையான கழிவகற்றும் முறைமையொன்று அமைக்கப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) டயகம பொல மலசலகூடத்தின் கழிவுகள் சேருகின்ற வெட்டப்பட்ட குழியில் கழிவுகள் முறையான பிரகாரம் அகற்றப்படுகின்ற முறைமையொன்று அமைக்கப்படவில்லை. | முறையான கழிவகற்றும் முறைமையொன்று அமைக்கப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் தொடர்பாக பிரதேச சபை போதியளவான பிரகாரம் அறிந்திராதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக குறித்த பணிகள் நிறைவேற்றப்படவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 பதவிகளில் காணப்பட்ட 81 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை . |

**3.3 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குக் கையளிக்கப்பட்ட 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய வாகனங்களை சபையின் பெயரில் கையேற்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை . |

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் மாகாண சபை உறுப்பினர் நிதியுதவியின் கீழ் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் 24 நபர்களுக்காக பொருள் உதவி வழங்குவதற்கு ரூபா 536,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் எந்தவொரு செயற்திட்டமும் அமுல்படுத்தப்படவில்லை. | தாமதமின்றி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) | பெல்மொறல் பகுதிக்கு நடைபாதை நிர்மாணிக்கும் வேலையின் கொங்கிறீட் இடுவதற்காக கொடுப்பனவு செய்யும் போது ரூபா 26,792 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாகச் செலுத்தப்பட்டவை சபை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 193 இன் பிரகாரம் பாதீடு | உரிய விதியின் பிரகாரம் | பதில் கிடைத்திருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட நிதி ஏற்பாடும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்குமிடையெ ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | . |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் | பதில் கிடைத்திருக்கவில்லை . |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு காலப்பகுதியில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | காலாண்டிற்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை . |